1982 பிப்ரவரி 4] [திரு. க. அன்பழகன்]

சொல்லிவிட்டு நம்முடைய சட்டமன்றத்தினுடைய நடைமுறைகளுக்கு எந்தவிதமான குறையும் ஏற்படாத வகையில் அவர்களுடைய பாதுகாப்பிற்காக வேறு எந்த பாதுகாப்பு ஏற்பாடுகளையும் அவர்கள் செய்துகொள்வதையும் நாம் தடுப்பதில்லை. ஆனால் அப்படி செய்கின்ற அந்த ஏற்பாடுகள் எந்தக் குறையையும் ஏற்படுத்தாமல் இருப்பதற்காக 'Ul ima e Au h i y' என்ற முறையில் தங்களுடைய மேற்பார்வைக்குக் கீழே அவை செய்யப்படுவதாக இருக்கவேண்டிய காரணத்தினால், எதைச் செய்வதாக இருந்தாலும் செக்ரடேரியட்டில் பாதுகாப்புக்காக தீவிர நடவடிக்கை எடுப்பதாக இருந்தாலும் சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற கூட்டம் இவைகளுக்கு குந்தகம் இல்லாமல் இருப்பதற்கு, தங்களுக்கு அறிவித்துவிட்டு செய்யவேண்டும் என்பதற்காகத்தான் இந்த முழு உரிமை தரப்பட்டிருக்கிறது. எனவே உறுப்பினர்கள் பாதுகாப்பு என்று மட்டுமல்லாமல், சட்டமன்றத்தினுடைய பெருமையை ig iy அந்த பெருமைக்கும் கண்ணியத்திற்கும் மகிழ்ச்சி தருகிற வகையில், தங்களுக்குத் தரப்பட வேண்டிய நியாயமான அதிகாரத்தை ஏற்றுக் கொண்டு செயல்படும்படியாகச் செய்யவேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

(இ) பால்கமிஷன் அறிக்கை . . ஆங்கிலப் படிவம்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் நேற்றைக்கு முன்தினம் நீதிபதி பால் கமிஷன் அறிக்கையை வைத்தார்கள். ஆங்கிலத்திலே இருக்கின்ற அதனுடைய தமிழ் மொழிபெயர்ப்பு உறுப்பினர்களுக்கு எல்லாம் தரப்பட்டது. சில நேரங்களிலே, தமிழிலே உள்ள லீகல் டெர்ம்ஸ் உறுப்பினர்களுக்குப் புரியாவிட்டால் ரெபரன்ஸுக்காக ஆங்கில காப்பியைப் பார்ப்பது வழக்கம்.

நான் போய் நம்முடைய செரட்டரியிடத்திலே ஆங்கில காப்பி இருக்கிறதா என்று கேட்டேன். அவர்கள் ஆங்கில காப்பியைக் கொடுத்து இருக்கிறார்கள். தமிழிலே இணைப்பு, அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது, அரசின் கருத்து என்ன என்பதைப் பற்றி ஒரு அனெக்ஷர் கொடுத்திருக்கிறார்கள். அது ஆங்கிலத்திலே இல்லை. தங்களுடைய செயலாளர் அது ஆங்கிலத்திலே இல்லை என்று தெரிவித்தார்கள். பிறகு அது தேவை என்று எழுதி எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே கடிதம் எழுதி எனக்கு ஒரு ஆங்கில காப்பி ரெபரன்ஸ்ஸுக்காக வேண்டுமென்று கேட்டார்கள். ஆங்கிலத்தில் அது இல்லை என்று

தெரிவித்தார்கள். சீப் செகரட்டரி திரு திரவியம் அவர்களிடம் நான் கன்சல்ட் செய்தேன், அவர்கள் இல்லை என்றார்கள். சர்க்கார் எப்போதும் ஆங்கிலத்திலே எழுதித்தான் தமிழிலே போடுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கமிஷன் அறிக்கையின் காப்பி கொடுக்கப்பட்டிருக்கிறதே.

திரு, துரைமுருகன் : பாலோ அப் ஆக்ஷன் எடுத்ததுபற்றிய ஜி.ஓ. ஆங்கிலத்திலே இல்லை. தமிழிலே தான் இருக்கிறது.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பால் கமிஷன் அறிக்கை தமிழிலும், ஆங்கிலத்திலும் தரப்பட்டிருக்கிறது. ஆனால் அதையொட்டி அரசாங்க சார்பில் தரப்பட்டுள்ள அறிக்கை ஆங்கிலத்திலே தரப்படவில்லை. தமிழிலே மாத்திரம் தரப்பட்டிருக்கிறது. அதுவும் ஆங்கிலத்திலே தரப்படவேண்டும் என்பது தான் கோரிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எங்களிடத்திலே வந்தது பூராவும் தமிழிலே தான் வந்தது. வந்ததைக் கொடுத்திருக்கிறோம். ஆங்கிலத்திலே வேண்டுமானால் அரசினிடத்திலே கேட்டு வாங்கித் தருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பால் கமிஷன் அறிக்கை தமிழிலும், ஆங்கிலத்திலும் இரண்டிலும் வைக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் வைப்பதுதான் வழக்கமாக இருந்துகொண்டு இருக்கிறது. தமிழிலே கிடைத்திருக்கிறது, ஆங்கிலம் கிடைக்கவில்லை, என்று மன்ற உறுப்பினர்கள் கூறுவதன் காரணமாக இந்த விவாதம் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னதாக ஆங்கிலத்திலும் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு), அரசாங்கம் அளித்த மெமோரண்டம் தமிழிலே தரப்பட்டிருக்கிறது, ஆங்கிலத்திலே வேண்டும் என்கிறார்கள், ஆங்கிலம் வேண்டும் என்று உறுப்பினர்கள் கோருவதன் காரணமாக இந்த விவாதம் எடுத்துக்கொள்வதற்கு உள்ளாக ஆங்கிலத்திலும், தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.